**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

IN THE COURT OF : Sessions Court for trial of Communal Clash Cases in Southern Districts, Madurai.

Case No : **CC.No. 312/2019**

Prosecution witness : **3**

| | |
|---|---|
| Name: அய்யம்மாள் | Caste: |
| Father'sName: | Calling: |
| Village: | Religion: |
| Taluk: | Age: |
| A1 present. A2 absent. Petition filed | |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of** 1873 **on the day of** 06.08.2025

**முதல் விசாரணை**:

நான் தற்போது தேனி டவுன் காவல்நிலையத்தில் தலைமைக்காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 15.05.2019 அன்று தனி பிரிவு அலுவலாக காலை 08.00 மணிக்கு போதைப்பொருள் நுண்ணறிவு பிரிவு அலுவலகத்தில் பணியில் இருந்தபோது தகவலாளி கூறிய தகவலின் அடிப்படையில் 08.10 மணிக்கு சார்பு ஆய்வாளர்-சதீஷ் வழக்கு பொதுநாட்குறிப்பில் குறிப்பிட்டு 08.15 மணிக்கு காவல் ஆய்வாளர்-ராஜேஷ்கண்ணன் அவர்களிடம் அனுமதி பெற்று போதைப்பொருள் நுண்ணறிவு சம்பந்தமாக பணிக்கு செல்வதற்கு அனுமதி பெற்றோம். நிலையத்திலிருந்து 08.25 மணிக்கு நானும், தலைமைக்காவலர்-1108-லாரன்ஸ், 1681-பாஸ்கர், சார்பு ஆய்வாளர்-சதீஷ் ஆகியோர் நிலையத்திலிருந்து கிளம்பி பழைய இரயில் நிலையத்திற்கு 8.45 மணிக்கு சென்றோம். அங்கு போதைப்பொருள் நுண்ணறிவு பிரிவு சம்பந்தமாக பணியில் இருந்த போது ரகசிய தகவலாளி ஒரு ஆணையும், ஒரு பெண் நபரையும் 9.45 மணிக்கு அடையாளம் காண்பித்து விட்டு மறைந்தார். பின்னர் நானும், சார்பு ஆய்வாளர்-சதீஷ்,

தலைமைக்காவலர்-லாரன்ஸ் ஆகியோர் அவர்களை நிறுத்தி சார்பு ஆய்வாளர் சுய அறிமுகம் செய்துகொண்டார். 9.45 மணிக்கு பணியில் இருக்கும்போது கீழக்கூடலூரை சேர்ந்த மாமுண்டி தேவர் சந்து தெருவை சேர்ந்த ராஜேந்திரன் மகன் சிவனேசன் மற்றும் ராஜேந்திரன் மனைவி புஷ்பம் இருவரையும் அழைத்து நாங்கள் சுய அறிமுகம் செய்துகொண்டோம். இருவரிடமும் அவர்கள் வெள்ளை நிற சாக்குப்பையுடன் சிவனேசன் மற்றும் புஷ்பமும் இருந்தார்.

அரசுதரப்பு வேண்டுகோளுக்கிணங்க முதல் விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.